**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 15ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 21/2024**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர், பண்டாரவாடை, தெற்குதெரு என்ற முகவரியில் வசித்து வரும் பொன்னுசாமி அவர்களின் குமாரர் 37 வயதுள்ள ராஜா. ..மனுதாரர்/ வாதி

//எதிர்//

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் பண்டாரவடை, தெற்கு தெரு என்கிற முகவரியில் வசித்து வரும் விஜயகுமார் அவர்களின் மனைவி சுமார் 42 வயதுள்ள புஷ்பலதா. ..எதிர்மனுதாரர் / பிரதிவாதி

மனுதாரர், இம்மனுவானது மனு சொத்தின் அமைப்பு மற்றும் அமைவிடத்தினை பார்வையிட்டு வழக்கறிஞர்/ஆணையர் அவர்களை நியமனம் செய்து நில அளவையர் உதவியுடன் மனு சொத்தினை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 07.07.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 07.07.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 31.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கவியரசன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் கடந்த 03.10.2024 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**சொத்து விவரம்**

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், செம்பனார்கோவில் சார்பதிவகம் எல்லைக்குட்பட்ட தரங்கம்பாடி தாலுக்கா, 105 ஆக்கூர் பண்டாரவடை, தெற்கு தெருவில்...

பழைய புல எண்.122/4, புதிய புல எண். 122/4B1–ல் 4 செண்ட் புஞ்சை பட்டா எண். 295.

**<u>நான்கெல்லை</u>**

வாய்க்காலுக்கு வடக்கு, பாலசுந்தரம் முதலியார் நஞ்சைக்கு கிழக்கு, கோயிலுக்கும் பாதைக்கும் தெற்கு, சுப்ராயபிள்ளை புஞ்சைக்கும் மேற்கு இதற்குட்பட்டது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.